திருவேற்காடு நகராட்சி,
சென்னை–77.
நாள்.21.08.2025

# நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

குறள்:– ஒருத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பொருள்:– தனக்கு தீமை செய்தவரைப் பொறுக்காமல் தண்டித்தவரைப் பெரியோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார், பொறுத்துக் கொண்டவரையோ பொன்னாகக் கருதி மதிப்பர்.

அன்புடையீர்,

திருவேற்காடு நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் திரு.E.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் வருகின்ற 29.08.2025 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப் படவுள்ளது. இக்கூட்டத்தில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கூட்டப்பொருள்

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் ஜூலை 2025 மாதத்திற்கான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

---

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் பல்வேறு இனங்களின் ஜூலை 2025 மாதத்திற்கான செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

---

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு , இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. ஜூலை 2025 மாதத்திற்கான பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜுலை | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 2025 | 52 | 65 | 117 | 42 | 24 | 66 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 52 | 65 | 117 | 42 | 24 | 66 | 0 | 0 | 0 |

<u>அலுவலக குறிப்பு</u> :- மன்றத்தில் பதிவு செய்யலாம்.

<u>பொருள் எண்.4</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படும்" என்ற சட்டமன்ற அறிவிப்பின்படி முதலமைச்சரின் காலை உணவு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசு தலைமை செயலாளர் அவர்களின் கடிதம் எண்.1021/SP1/2022 நாள்.27.01.2023-ல் அனைத்து நகராட்சி பகுதிகளில் மேற்படி திட்டம் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்-1, நாள்.10.03.2023-ன்படி இந்நகராட்சியில் பகுதியில் கோலடி கிராமம் சர்வே எண்.63/5-ல் உள்ள நகராட்சி பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற்கூட கட்டடம் அமைக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் உணவு வழங்குபவர் / நிறுவனம் தேர்வு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.28.04.2022-ன்படி 26.05.2023 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அளிக்கப்பட்டதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.No Food Waste என்ற நிறுவனத்தாருக்கு இந்நகராட்சி செயல்முறை உத்திரவு ந.க.எண்.1160/2023/இ1, நாள்.26.05.2023-ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மேற்கண்ட ஒப்பந்ததாரின் ஒப்பந்த காலம் 25.05.2024-வுடன் முடிவடைந்து, மேலும், தொடர்ந்து முன்று மாதங்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது 26.05.2024 முதல் 25.08.2024 வரை, 26.08.2024 முதல் 25.11.2024 வரை, 26.11.2024 முதல் 25.02.2025 வரையிலும், மேலும் 6 மாதங்களுக்கு 26.02.2025 முதல் 25.08.2025 வரையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிநீட்டிப்பு வழங்கப்பட்ட பணிக்காலம் 25.08.2025-வுடன் முடிவடைவதால், தற்போது மேற்கொண்டு வரும் M/s.No Food Waste என்ற நிறுவனத்தார் மூலமாகவே அதே விலைவிகிதத்தின் அடிப்படையில் மேலும், ஆறு மாத காலத்திற்கு காலை உணவு திட்டத்தின் அவசியம் கருதி 26.08.2025 முதல் 25.02.2026 வரை பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

அ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் அறிவுரையின்படி கோலடி பகுதியில் உள்ள ஒருங்கிணைப்பு உணவு தயாரிக்கும் ஒப்பந்ததாரருக்கு (Caterers Contractors) ஒப்பந்தகாலம் முடிவுற்ற பின்னர் முறையாக கால நீட்டிப்பு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மேலும், ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு 26.08.2025 முதல் வழங்கிட அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**பொருள் எண்.5**

திருவேற்காடு நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு புதியதாக அமைக்கப்படும் ஆழ்துளை கிணறுகளுக்கு புதியதாக மின் இணைப்பு பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**பொருள் எண்.6**

திருவேற்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கால்வாய்கள் தூர்வாருதல், மரம், செடி, கொடிகளை அகற்றுதல், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் தற்காலிக கால்வாய் அமைத்தல் போன்ற பணிகளை பருவ மழை துவங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 26.07.2025 அன்று இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள ஜே.சி.பி இயந்திரம் தமிழ்நாடு அரசின் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகையின் அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும் மற்றும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சம் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**பொருள் எண்.7**

திருவேற்காடு நகராட்சியில் தினசரி குடிநீர் விநியோகம் ஆழ்துளை கிணறுகளை சார்ந்து உள்ளது. நிரந்தரமாக எந்த ஒரு குடிநீர் ஆதாரமும் இல்லை. இவ்வாண்டு மிகுந்த கோடைக்காலமாக உள்ளதால் நகரின் அனைத்து பகுதிகளிலும் தினசரி குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்துளை கிணறு முற்றிலும் வறண்டும், நீர்மட்டம் குறைந்தும் உள்ளதால், குடிநீர்

விநியோகம் செய்ய முடியாமல் இருந்ததையடுத்தும், பொது மக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்க வேண்டியதின் அவசியத்தின் பொருட்டு கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | வார்டு எண் | சாலையின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 13,15 (ம) 18 | ஆவடி பிரதான சாலை (காடுவெட்டி மருத்துவமனை), யாதவர் தெரு, பத்மாவதி நகர் மற்றும் செல்வ கணபதி நகர் பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.20 | 8.94 |

மேற்காணும் வார்டுகளுக்குண்டான பகுதியில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்வது மிகவும் அவசியமான பணியாகும். இந்த ஆண்டு கடும் கோடை காலம் என்பதால், ஏற்கனவே பெறப்பட்ட வந்து குடிநீர் அளவு குறைந்து, மேலும் நிலத்தடி நீர் மட்டம் அதிக அளவு குறைந்ததால் பொதுமக்களுக்கு போதிய அளவு குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், குடிநீர் பணியின் அவசியத்தினை கருதி குடிநீர் பகுப்பு ஆய்வாளர் மூலம் குடிநீர் பகுதிகளை கண்டறிந்து ஆழ்துளை கிணறுகள் அமைப்பது மிகவும் அவசியம் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், குடிநீர் பற்றாக்குறை தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பலபுகார்கள் பெற்றதையடுத்தும், கோடை காலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாதவாறு உள்ளாட்சி அமைப்புகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் ஆகியோர்களின் ஆய்வுக் கூட்டங்களின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்தும், மேலும், 2024 நாடாளுமன்ற தேர்தல் விதிகள் அமுலில் உள்ள சூழ்நிலையில் அவசரம் அவசியம் கருதி பொதுமக்களின் அடிப்படை வசதிகளின் முக்கியமான தேவை குடிநீர் பற்றாக்குறையினை தீர்க்க வேண்டியதினை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதிகளில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 57 (7)–ன்படி அனுமதித்து குடிநீர் பற்றாக்குறையினை

தீர்க்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேற்படி பணிக்குண்டான மேலே தெரிவித்துவாறு செலவினத்தினை குடிநீர் நிதி / பொது நிதியின் கீழ் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**பொருள் எண்.8**

திருவேற்காடு நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 03.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை 31.07.2025-ல் விலை உறை திறக்கப்பட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பு நோக்கு செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 18 | நூம்பல் பிரதான சாலை (வேலப்பன்சாவடி சந்திப்பு முதல் நூம்பல் சாலை வரை) தார்தளம் அமைத்தல் 015018R377 | 112.00 | 1. M/s.Jeeva Enterprises (L1)<br>2. M/s.Sundaram and Co (L2) | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.16 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்படி பணியில் ஒவ்வொரு பணிகளிலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி திட்டப்பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

பொருள் எண்.9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திட்டம் மற்றும் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் அடிப்படை வசதி பணிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய், கட்டடங்கள், தெருவிளக்கு, குடிநீர் போன்ற இதர பணிகளை மேற்கொள்ளவும், இதர இனங்களுக்கும் தினசரி நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்க வேண்டியுள்ளது. இது தொடர்புடைய உத்தேச செலவினத்திற்கும் ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6247/2024/இ1)

---

பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 16.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 10 | இராஜரத்தினம் நகர் பிரதான சாலை மற்றும் 4வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல் | 12.00 | 1. எம்.ரவிச்சந்திரன் (L1)<br><br>2. S.G.நாராயணன் (L2) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.18 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:-

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

பொருள் எண்.11

திருவேற்காடு நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Un–Tied Grant) 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 17.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | வார் டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 6 (ம) 9 | வேலம்மாள் சாலை (015006R076) (ம) பல்லவன் நகர் 2வது பிரதான சாலைக்கு (015009R528) தார்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் (015006R076). | 50.00 | 1. M/s.AVN Infra Tech (L1)<br><br>2. M/s.Janishree Corporate Service Pvt Ltd., (L2)<br><br>3. M/s.MS Enterprises (L3) | 1.45 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.00 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>2.05 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 8 | பாஸ்கரன் 1வது தெரு (015008R250) , பாஸ்கரன் 2வது தெரு (015008R250) (ம) சுப்பிரமணி தெரு (015008R252) சாலைக்கு தார்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 21.00 | 1. M/s.Sri Selliamman & Co (L1)<br><br>2. M/s.Janishree Corporate Service Pvt Ltd., (L2)<br><br>3. M/s.Sundram and Co (L3) | 1.32 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.00 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>மதிப்பீட்டு விலை |

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்.12**

திருவேற்காடு நகராட்சியில் 15.07.25 அன்று வார்டு எண்.1 (ம)13, 16.07.25 அன்று வார்டு எண்.8 (ம) 9, 17.07.25 அன்று வார்டு எண்.11 மற்றும் 12 ஆகிய வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு "உங்களுடன் ஸ்டாலின்" என்ற முகாமில் மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் வார்டு எண்.9–ல் யுரேனஸ் தெரு, வார்டு எண்.13 சுவாகத்தம்மாள் தெரு மற்றும் வார்டு எண்.14 கற்பகாம்பாள் நகர் ஆகிய பகுதியில் குடிநீர் வசதி இல்லை என பொதுமக்களால் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளை நேரில் ஆய்வு செய்த போது குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, மேற்படி பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**பொருள் எண்.13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பிள்ளையார் மடம் தாங்கல் பிரதான சாலை (திருவேற்காடு சாலை) மற்றும் நூம்பல் ஏரிக்கரை தெரு பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் பாதாள சாக்கடை பிரதான குழாய்களை சுமார் 0.880 கி.மீ நீளத்திற்கு அமைத்துக்கொள்ள உரிய அனுமதி வழங்கிட கோரி திட்டப் பொறியாளர் I (P) III, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகர் நிர்வாக வளாகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி நகர், இராஜாஅண்ணாமலைபுரம், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.CMWSSB/ CE(P)II/S,E(P)III ADBProject/ KBM UGSS நாள்.05.03.2021–ன்படி கடிதம் நகராட்சிக்கு பெறப்பட்டதையடுத்து, மேற்படி நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் வழியே பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் போது ஏற்படும் சாலை பழுதுகளை சீர் செய்ய சீரமைப்புக் கட்டணமாக ரூ.66,00,000/–ஐ இந்நகராட்சிக்கு செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, அறிவுறுத்தியதை தொடர்ந்து, மேற்கண்ட துறையினரால் சாலை சீரமைப்பு கட்டணம் இந்நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டு, மேற்கண்ட துறையின் மூலம் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளதால், அச்சாலையினை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.66.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக, பொறியியல் பிரிவு வல்லுநர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மதிப்பீட்டு தொகை ரூ.56.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9735/2025/எம்ஏ1,

நாள்.16.06.2025–ன்படி நிபந்தனைகள் விதித்து அனுமதி அளித்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மேற்படி பணிக்கான உரிய அனுமதிகள் பெற்று, பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 31.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 7 | அயனம்பாக்கம் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நவீன LPG தகன மையம் கட்டிடம் அருகில் உள்ள மயான சாலைக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.00 | M/s.Arokianathan Construction (L1)<br><br>2. M/s.KGR Group (L2) | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>5.01 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 17 | புளியம்பேடு பகுதியில் உள்ள மயான சாலைக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 2.90 | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை | |

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) வரிசை எண்.2–ல் உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி

உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்.15**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 15.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | சுந்தரசோழபுரம் கிராமம் சர்வே எண்.21/4-ல் உள்ள தாழங்குளத்தில் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 18.785 | 1. எம்.ரவிச்சந்திரன் (L1)<br>2. S.G.நாராயணன் (L2) | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.97 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள் கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்.16**

திருவேற்காடு நகராட்சியில், சொத்து வரி காலிமனை வரி தொழில் வரி, தொழில் உரிமக் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டண விவரங்களை வரி விதிப்புதாரர்களுக்கும், அதே போன்று மழைக் காலங்களில் பரவும் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு தகவல்களை பொது மக்களுக்கு Voice Announcement System மூலம் தகவல் தெரிவிக்க ஏதுவாக பின்வரும் கருவியினை

நகராட்சியின் மூலம் விலைப்புள்ளி அடிப்படையில் நகராட்சி பொது நிதியின் கீழ் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

SDE SMARTEK DUAL SIM – VOICE ANNOUNCEMENT SYSTEM (Pro Edition – Voice Announcement Software and Hardware Installation Data Conversion of Voice and Training Charge – கருவி ஒன்றுக்கு Rs.89,450/– வீதம் 4 கருவிகளுக்கு – ரூ.3,57,800/–

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**பொருள் எண்.17**

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வரை உள்ள வார்டுகளில் மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்தி தருமாறு நகரமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு சிறுபாண்மையினர் நலன் மற்றும் வெளி நாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வார்டு ஒன்றுக்கு தலா ரூ.25.00 இலட்சம் வீதம் அனைத்து வார்டுகளிலும் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைத்து, ஒப்புதல் பெற்று பணியிணை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். அதன்படி பின்வருமாறு பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வார்டு எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 2 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 3 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 4 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 5 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 6 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 7 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 8 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 9 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |

| | | |
|---|---|---|
| 10 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 11 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 12 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 13 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 14 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 15 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 16 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 17 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |
| 18 | மழைநீர் வடிகால் / சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல் | 25.00 |

மேற்காணும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைத்து, ஒப்புதல் பெறப்பட்ட பின்பு உரிய நடைமுறைகளை பின்பற்றி பொது நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.18</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 26.07.2025 அன்று திருவேற்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் நகராட்சி பராமரிப்பில் உள்ள நீர் நிலைகளில் காணப்படும் ஆகாய தாமரை செடிகளை உடனடியாக அகற்றி அதன் விவரத்தினை புகைப்படத்துடன் அறிக்கையாக அளிக்குமாறு அறிவுறுத்திள்ளார். அதன்படி இந்நகராட்சிக்குட்ட அயனம்பாக்கம் குளம் முழுவதும் ஆகாய தாமரை செடியில் சூழ்ந்துள்ளதால் அவற்றை அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

---

<u>பொருள் எண்.19</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 26.07.2025 அன்று திருவேற்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் நகராட்சி பராமரிப்பில் உள்ள பூங்காக்கள், சாலைகள் மற்றும் திறந்தவெளியிடங்கள் ஆகியவற்றில் உள்ள

புற்கள், செடி கொடிகள் அகற்றுவதற்கு 2 எண்ணிக்கை Gross cutting Machine கொள்முதல் செய்து பூங்காக்களை முறையாக பராமரிக்குமாறு அறிவுறுத்திள்ளார். அதன்படி மேற்காணும் 2 எண்ணிக்கை Gross cutting Machine கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/- ஆகும். இத்செலவினத்தை பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.20</u>

திருவேற்காடு நகராட்சிக்கு சொந்தமான Innova Crysta வாகனம் எண்.TN 12 BC 3434-ன் கடந்த 28.06.2025-ம் தேதியன்று மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நடத்தப்படும் நிழச்சியில் கலந்துக் கொள்ளும் பொருட்டு மாண்புமிகு.அமைச்சர் அவர்களின் வாகனத்தின் பின்புறம் புளியம்பேடு தேசிய நெடுஞ்சாலை வழியே எங்கள் வாகனம் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாரத விதமாக வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பூவிருந்தவல்லி, ஆவடி போக்குவரத்து புலனாய்வு பிரிவு, காவல் உதவி ஆய்வாளர் மூலம் CSR எண்.884/2025-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வாகனத்தினை Harsha Toyota, வேலப்பன்சாவடி நிறுவனத்திடம் பழுது நீக்கம் செய்ய தொகை ரூ.1,51,409/-க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் வாகனத்தின் அவசியத்தினை கருதி உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், Cash less அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட பட்டியல் தொகையினை Harsha Toyota, வேலப்பன்சாவடி நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரவும், மேலும், காப்பீட்டு தொகை பெற்றவுடன் நகராட்சி நிதியில் ஈடுசெய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)மேற்படி வாகனத்தின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பழுது நீக்கம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

இ) மேற்படி பணிக்கான தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்திடவும், காப்பீடு தொகை பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

---

<u>பொருள் எண்.21</u>

திருவேற்காடு நகராட்சியில் SUIDF 2022-2023 திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக 5734 எண்ணிக்கையிலான மாற்றம் செய்ய உரிய அனுமதிகள் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 1037 எண்ணிக்கையிலான

புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்க உரிய அனுமதிகள் பெற்று, தெருமின்விளக்குகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், தெருமின் விளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றுவதற்கு உரிய கணக்கெடுப்பு பணிகள் முடிவுற்று சுமார் 2 வருடம் ஆன நிலையிலும், தற்பொழுது குழல்விளக்கு மற்றும் CFL தெருவிளக்குகள் பல்வேறு பகுதிகளில் LED விளக்குகளான மாற்றம் செய்யாமல் உள்ளதால் மிகுந்த இருள் கொண்ட பகுதியாக உள்ளது. மேலும், பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமங்களை ஏற்படுத்துவதாலும், பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளது.

மேற்படி பகுதிகள் இருள் காரணமாக பாதிப்படையும் என எதிர்நோக்குவதாலும் விடுப்பட்டுள்ள பகுதிகளில் புதியதாக 45W திறன் கொண்ட 150 எண்ணிக்கையும் மற்றும் 70W திறன் கொண்ட 150 எண்ணிக்கை ஆக மொத்தம் 300 வகையிலான LED விளக்குகளை சப்ளை செய்து பொருத்திடும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.24.00 இலட்சத்திற்கும், பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

---

**<u>பொருள் எண்.22</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 16.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 17 | பிள்ளையார் மடம் தாங்கள் பிரதான சாலை (திருவேற்காடு சாலை மற்றும் நூம்பல் ஏரிக்கரை | 56.00 | 1. M/s.Arokiyanathan Construction (L1)<br><br>2. M/s.KGR Group (L2) | 0.97 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>5.11 % |

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| | | தெருவில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு தார்தளம் அமைத்தல். | | | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.23</u>

அரசாணை எண்.159 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.11.2015–ன்படி தமிழ்நாடு அரசிதழ் எண்.230 நாள்.02.11.2015–ல் தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 மற்றும் விதிகள் 9 (1)–ன் படி கீழ்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No. | Category of Street Vendors | Area | Vending Fee |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Stationary vendor (Full time) | Upto 10 sq.ft | 1% of the Guideline value subject to minimum of Rs.750/– per annum |
| | | From 10 to 25 sq.ft | 2% of the Guideline value subject to a minimum of Rs.1500/– per annum |
| | | More than 25 sq.ft | 3% of the Guideline value subject to a minimum of Rs.3000/– per annum |

| | | | |
|---|---|---|---|
| 2. | Stationary vendor (Part Time or time sharing) | Upto 10 sq.ft | 0.5% of the Guideline value subject to minimum of Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft | 1.0% of the Guideline value 100₹ subject to a minimum of Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft | 1.5% of the Guideline value subject to a minimum of Rs.1500/- per annum |
| 3. | Mobile vendor (with motor vehicle) | Upto 10 sq.ft | Rs.750/- per annum |
| | | From 10 to 25 sq.ft | Rs.1500/- per annum |
| | | More than 25 sq.ft | Rs.3000/- per annum |
| 4. | Mobile vendor ( vehicle without motor) | Upto 10 sq.ft | Rs.375/- per annum |
| | | From 10 to 25 sq.ft | Rs.750/- per annum |
| | | More than 25 sq.ft | Rs.1500/- per annum |
| 5. | Mobile vendor (headloads) | - | Rs.250/- per annum |

மேற்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்கவும் தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 மற்றும் விதிகள் 9 (2)-ன் படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மறு நிர்ணயம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.மன்றம் அனுமதிக்கலாம்.

---

**<u>பொருள் எண்.24</u>**

திருவேற்காடு நகராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025-26 ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 06.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 12 | திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.12–ல் உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல். | 4.35 | M/s.Sri Davaarakha Tech (L1)<br><br>Thiru.C.Ranganathan (L2) | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.06 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

அ) திருவள்ளூர் மாவட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை ஆணை கடித நக.எண்.2369/2025/அ10, நாள்.15.07.2025–ன்படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு பெறப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி 0.03 % மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள M/s.Sri Davaarakha Tech நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட தொடர் நடவடிக்கை மேற்கொண்மைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**பொருள் எண்.25**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 18.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் உள்ள நீர்முழ்கி மின்மோட்டார்களின் பம்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல் மற்றும் உதிரி பொருட்களை புதியதாக மாற்றியமைத்தல். | 7.30 | 1. G.விஜயகுமார் (L1)<br><br>2. M/s.JBS Infra Inc., (L2) | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.44 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

---

**பொருள் எண்.26**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 14.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றும் பணி (Desilting) மேற்கொள்ளுதல். | 9.00 | 1. M/s.Jayaseelan Contractor (L1)<br><br>2. G.Vijayakumar (L2) | 0.12 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.49 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றும் பணி (Desilting) மேற்கொள்ளுதல். | 9.00 | 1. M/s.JBS Infra Inc (L1)<br><br>2. M/s.AVN Infra Tech (L2) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.90 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | இந்நகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை ஜே.சி.பி மற்றும் Chain Dozer இயந்திரத்தினை | 9.90 | 1. M/s.AVN Infra Tech (L1)<br><br>2. K.R.Vadivel (L2) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.60 % |

| வ. எ ண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | கொண்டு அடைப்புகளை அகற்றும் பணி (Desilting) மேற்கொள்ளுதல். | | | மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.27</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 13.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ரூ. இலட்சத்தில்)

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | சக்ரீஸ்வரி நகர் 1வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 13.50 | 1. M.Ravichandran (L1)<br>2. R.Raman (L2) | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.40 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 2 | சக்திவேல் நகர் எம்.ஜி.ஆர் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 12.50 | 1. M/s.Geetha Construction (L1)<br>2. M/s.RR Builder (L2) | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | 3 | தெய்வநாயகி நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 11.80 | 1. M.Ravichandran (L1)<br>2. R.Raman (L2) | 0.36 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.41 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 4. | 4 | விக்னேஷ் நகர் 1வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 15.40 | 1. M/s. Janishree Corporate Services Private Limited (L1)<br>2.JR Agency (L2) | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | 5 | எட்டீஸ்வரன் கோயில் 3வது தெரு (விடுப்பட்டுள்ள பகுதிக்கு) மற்றும் குறுக்கு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 14.50 | 1. M/s. MK Construction (L1)<br>2.J.Gopi (L2) | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>4.93 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 6 | நேரு தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 12.40 | 1. M.Udhayanithi (L1)<br>2. M/s.AVN Infra Tech (L2) | 0.19 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.02 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 7 | ஜோதி நகர் பகுதிக்கு தார்தளம் அமைத்தல். | 14.70 | 1) Arokianathan Construction (L1)<br>2) KGR GROUPS (L2) | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.00 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | 8 | மெட்ரோ சிட்டி குறுக்கு தெருவிற்கு தார் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். | 14.70 | 1) M/s.Jeeva Enterprises (L1)<br>2) G.Vijayakumar (L2) | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.23 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | 9 | விசாக் அவென்யூ பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 14.50 | 1. M/s.AVN Infra Tech (L1)<br>2.K.R.Vadivel (L2)<br>3. M/s. JBS INFRA INC (L3) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.23 % மதிப்பீட்டை விட அதிகம்<br>0.51 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 10. | 10 | கருமாரியம்மன் நகர் மற்றும் தேவி நகர் 1வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.20 | 1. M/s.RR Builder (L1)<br>2. M/s.Geetha Construction (L2) | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.10 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 11. | 11 | ஐயப்பா நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 13.70 | 1) M/s.Jeeva Enterprises (L1)<br>2) G.Vijayakumar (L2) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.27 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 12. | 12 | செல்வகணபதி நகர் பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 14.40 | 1) M/s. JBS Infra Inc (L1)<br>2) M/s.AVN Infra Tech (L2) | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.17 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 13. | 13 | சக்திவேல் நகர் 2வது விரிவாக்கம் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய், மேல்மூடி மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல், சக்திவேல் நகர் 5வது தெரு மற்றும் பிரதான சாலைக்கு தூர் வாரி மேல் மூடி அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 13.80 | 1) J.Venkatesan (L1)<br>2) K.S.Janarthanam (L2) | 0.002 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.46 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 14. | 14 | கிருஷ்ணா நகர் பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 14.00 | 1. M/s.AVN Infra Tech (L1)<br>2.K.R.Vadivel (L2) | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.25 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 15. | 15 | பத்மாவதி நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்தல். | 13.50 | 1) M/s.Sri Selliamman and Co (L1)<br>2) M/s.Sundaram and Co (L2) | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.27 % மதிப்பீட்டை விட குறைவு |
| 16. | 16 | கேந்திர விஹார் பகுதிக்கு தார்தளம் அமைத்தல். | 14.90 | 1) J.Venkatesan (L1)<br>2) K.S.Janarthanam (L2) | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.16 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 17. | 17 | பாலாஜி நகர் பகுதிக்கு தார்தளம் அமைத்தல் மற்றும் ஜெய் நகர் பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 14.00 | 1. M.Ravichandran (L1)<br>2. R.Raman (L2) | 0.39 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.14 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 18. | 18 | ஐ.சி.எல் குடியிருப்பு 5வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 13.60 | 1. M/s. MK Construction (L1)<br><br>2.J.Gopi (L2) | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>4.84 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தலைவர்**
**திருவேற்காடு நகராட்சி**

**பெறுநர்:–**
நகர்மன்றத் துணைத் தலைவர்,
மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்,
திருவேற்காடு நகராட்சி.